TYPEWRITERS



Sales & Service

FUDO, 39/17, Power House Rd 3-rd Lane JAFFNA.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5.00

ரைப்ரைட்டர் வாங்கவும், விற்கவும், திருத்தவும் தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் வேலைகளுக்கும்

FUDO

Office Machine Co.

39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 09 வியாழக்கிழமை (23-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 57

# வவுனியாவில் புலிகள் தாக்கி 14 படையினர் மாண்டனர்!

## இரு வெவ்வேறு சம்பவங்களில் சடலங்கள் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 23

வவுனியாவில் கணேசபுரம், மாமடு ஆகிய இடங்களில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய இரு தாக்குதல்களில் மொத்தம் பதினான்கு இராணுவத்தினர் மாண்டனர்.

அவர்களில் ஐவரின் சடலங்களையும், ஏராளமான நவீன ரக ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

கணேசபுரம் காவல் அரணிலிருந்து நேற்று முற்பகல் பத்துமணியளவில் முன்னேறி வந்த இராணுவ அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

வவுனியா—மன்னார் வீதியில் நெளுக்குளத்திற்கும் பாலாமைக்கல்லுக்கும் இடையில் கணேசபுரம் அமைந்துள்ளது.

அந்தத் தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த பத்துப் படையினர் உயிரிழந்தனர். அவர்களில் ஐவரின் சடலங்களை விடுதலைப் புலிகள் எடுத்தனர். எஞ்சிய ஐவரின் சடலங்களை தாக்குதலில் காயமடைந்த படையினர் தூக்கிக்கொண்டு காவல் அரணுக்குச் சென்றனர்.

பிரஸ்தாப தாக்குதலின் போது, நவீனரக ஆயுதங்கள் பலவற்றையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

### சடலங்கள் பார்வைக்கு

வவுனியா, கணேசபுரத்தில் புலிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட படையினர் ஐவரின் சடலங்களும் நேற்று இரணைஇலுப்பைக் குளம் காக்கையன் குளம் ஓமந்தை ஆகிய இடங்களில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன.

ஏராளமான மக்கள் சடலங்களைப் பார்வையிட்டனர். [இ-15]

### முச்சந்தி முரளி



ஆனை தன் தலை மீது தானே மண் அள்ளிப் போட்ட மாதிரி எண்டு சொல்லுங்கோ

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 23

வவுனியா - மாமடு, கணேசபுரம் தாக்குதல்களில் புலிகளால் 12 நவீன ரக துப்பாக்கிகள் உட்பட பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:

★ ஏ. கே. எல். எம். ஜி. ரகத் துப்பாக்கி — 01

★ ஜி 3, ஏ 3 ரகத் துப்பாக்கி — 01

★ ரி 81 ரகத் துப்பாக்கிகள் — 02

★ ரி 56 - 1 ரகத் துப்பாக்கிகள் — 03

★ ரி 56 - 2 ரகத் துப்பாக்கிகள் — 04

★ ரி 56 - பட்மொடல் துப்பாக்கி — 01

★ ஏ. கே. எல். எம். ஜி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# அகதிகளுடன் முதலாவது கப்பல் திருமலை வந்தது

## அவர்கள் தங்க உப்புவெளியில் விசேட முகாம்

திருகோணமலை, ஜன. 23

இந்தியாவில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் முதலாவது தொகுதியினர் நேற்று கப்பல் மூலம் திருகோணமலை சீனக்குடாத் துறைமுகத்தை வந்தடைந்தனர். இவர்களைத் தங்க வைப்பதற்காக உப்புவெளியில் விசேட முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் அந்த முகாமுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று வந்திறங்கிய முதலாவது தொகுதி அகதிகளை புனருத்தாரண புனர்வாழ்வு சமூக நலத்துறை அமைச்சர் திரு. பி. தயாரத்தின, துணை அமைச்சர் திரு. சமந்தா கருணாரத்தினா, அமைச்சுச் செயலாளர் திரு. கிறிஸ் டி. சில்வா, கூட்டுப்படை தலைமையக தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, புனருத்தாரண அதிகார சபையின், தலைவர் திலக் சந்திரசேகர நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருவாளர் கே. நவரத்தினம், ராஜகுகனேஸ்வரன்,

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யுத்தம் முடிவடையும் வரை நாடு திரும்புவதற்கு மறுப்பு

### அகதிகள் குறித்து பி. பி. சி.

கொழும்பு, ஜன. 23

தமிழ்நாடு மாநிலத்தில் தங்கி உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் பெரும்பாலானோர் யுத்தம் முடிவடையும் வரை தாயகம் திரும்புவதில்லை என்பதில் உறுதியாக இருந்து வருகின்றனர். இதில் சந்தேகமே இல்லை.

இந்தியாவில் இருந்து திருகோணமலை திரும்பிய முதலாவது தொகுதி இலங்கைத் தமிழ் அகதிகளை நேற்று கொழும்பில் உள்ள பி.பி.சி. செய்தியாளர் கிறிஸ்தொபர் மொறிஸ் சந்தித்தார்.

அதன் பின்னர் அவர் பி.பி.சிக்கு அனுப்பிய தகவலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அகதிகளில் பலர், தாம் மீண்டும் அகதி முகாமில் தங்க வைக்கப்படுவது குறித்து கவலை தெரிவித்தனர் என்றும் பி. பி. சி. செய்தியாளர் தெரிவித்தார். [இ-எ-3]

### பத்மநாபா கொலை வழக்கு:

## நாகராஜனை பிணையில் விடுவிக்க நீதிபதி உத்தரவு

சென்னை, ஜன. 23

பத்மநாபா கொலை வழக்குத் தொடர்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழக முன்னாள் உள்துறைச் செயலாளர் திரு. ஆர். நாகராஜனை நிபந்தனையுடனான பிணையில் விடுதலை செய்யும்படி இவ்வழக்கை விசாரித்து வரும் சிறப்பு நீதிபதி திரு. சித்திக் நேற்று உத்தரவிட்டார்.

இருபத்தையாயிரம் ரூபாவுக்கான சொந்த பிணையும், இதே தொகைக்கான இரண்டு ஆட் பிணையிலும் அவரை விடுதலை செய்ய திரு. சித்திக் உத்தரவிட்டார்.

திரு. நாகராஜன் சென்னையிலேயே இருக்க வேண்டும் என்றும் - வெள்ளிக்கிழமை தோறும் சென்னை நகர முதன்மை நீதிபதி முன் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. நாகராஜனுக்கு உடல் நலம் இல்லாததால் மருத்துவ சான்றின் அடிப்படையில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நெடுந்தீவிலிருந்து நேற்று 26 பேர் யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 23

நெடுந்தீவில் சிக்கியிருந்த 26 பேர் நேற்று 'குமணை' கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் இவர்களைக் கூட்டிவந்து அவரவர் உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

பதினொரு ஆண்கள், 7 பெண்கள், 8 சிறுவர்களுமாக மொத்தம் 26 பேர் அழைத்து வரப்பட்டனர்.

கடந்த மாதம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் கப்பல் மூலம் உணவுப் பொருள்களை நெடுந்தீவுக்கு எடுத்து வந்தனர் என்றும்—

அதுவரை — சுமார் மூன்று மாத காலம் — நெடுந்தீவு மக்கள் உணவுக்கு வழியின்றி அரைவயிறும் கால்வயிறுமாக பட்டினி கிடந்தனர் என்றும் அங்கிருந்து வந்த ஒருவர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இங்கிருந்து சென்றோரை உறவினர் வரவேற்றனர்

யாழ்ப்பாணம், ஜன. 23

மூன்று மாதகாலம் போக்குவரத்து வசதியில்லாமல் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த நெடுந்தீவுவாசிகள் 121 பேர் கப்பல் மூலம் தமது சொந்த இடத்துக்கு சென்று இறங்கியதும் அவர்களை உறவினர்கள் ஆரத்தழுவி சந்தோசத்துடன் வரவேற்றனர்.

'குமணை' கப்பல் மூலம் அவர்களை நெடுந்தீவுக்கு அழைத்துச் சென்ற செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் அங்கு அவரவர் உறவினர்களிடம் அவர்களை ஒப்படைத்தனர்.

கடந்த திங்களன்று பருத்தித்துறையிலிருந்து கப்பலில் புறப்பட்டுச் சென்ற இவர்கள் செவ்வாயன்று நெடுந்தீவில் இறங்கினர். [உ-3-111]

## உதவி வழங்கும் நாடுகளின் 14 தூதுவர்கள் வவுனியாவில்

வவுனியா, ஜன. 23

இலங்கைக்கு உதவி வழங்கும் 14 நாடுகளின் தூதுவர்கள் நேற்று முன்தினம் வவுனியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டதாக கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

அங்குள்ள அகதி முகாம்களைப் பார்வையிட்ட இக்குழுவினர், பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள், பொலீஸ் - இராணுவ உயர் அதிகாரிகள், நிர்வாகத்துறை அதிகாரிகள் போன்றவர்களையும் சந்தித்து உரையாடினர் என்றும் அந்தச் செய்தி தெரிவிக்கின்றது. [ஒ-த]

# போரில் பயன்படுத்த இருந்த குண்டுகளும் நாசமாகின!

## சேமநல நிலையத்தில் தங்கியிருந்த படையினரே குண்டு வெடிப்புக்கு இரை!!

கொழும்பு, ஜனவரி 23

சீனக்குடா விமானத் தளத்தில் நேற்று முந்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த குண்டு வெடிப்பின்போது—

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் பயன்படுத்துவதற்கென விமானப் படையினர் களஞ்சியப் படுத்தி வைத்திருந்த பெருவாரியான குண்டுகள் நாசமடைந்தன.

இவ்வாறு நாசமடைந்த குண்டுகளில் வெளிநாடுகளில் இருந்து சொள்வனவு செய்யப்பட்ட நவீன குண்டுகளும், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட குண்டுகளும் அடங்கும் என்று பாதுகாப்புத் துறை வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

குண்டு வெடிப்பு நடந்த அன்று சம்பள தினமாதலால் விமானப் படை சேமநிலையத்தில் பல படையினர் தங்கி நின்றதாகவும், அந்தக் கட்டடமும் இடிந்து விழுந்ததால் அதில் சிக்குண்டு பலர் மரணமானார்கள் அல்லது காயமுற்றார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

செவ்வாய் முற்பகல் சுமார் 11.50 மணியளவில் முதலாவது குண்டு பெரிய சத்தத்துடன் வெடித்தது. அதனைத் தொடர்ந்து சில மணி நேரம் பெரும் இடியோசை கேட்டது. பல நூற்றுக்கணக்கான குண்டுகள் தொடர்ந்து வெடித்தன. திருமலை நகரம் உட்பட சீனக்குடாவைச் சூழவுள்ள பகுதிகள் அதிர்ந்தன. எங்கும் ஒரே புகைமண்டலமாக இருந்தது. முதலாவது குண்டு வெடித்த இடத்தில் மிக ஆழமான பெரிய கிடங்கு ஒன்று இப்போது காணப்படுகிறது. [அ-5]

### 14 பேரின் சடலங்களே மீட்கப்பட்டனவாம்!

### 16 பேர் பற்றி தடயமே இல்லை!!

கொழும்பு, ஜன. 23

சீனக்குடா விமானத் தளத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தோரில் 14 பேரின் சடலங்கள் மட்டும் இதுவரை கண்டெடுக்கப்பட்டன என்றும் குண்டு வெடித்த இடத்துக்கு வெகு சமீபமாக நின்ற 16 பேரின் கதி பற்றி எந்த ஒரு தடயமும் கிடைக்கவில்லை என்றும் செய்தி ஏஜன்சிகள் தெரிவிக்கின்றன.

இந்த 16 பேரின் சடலங்களும் தூள் தூளாகப் போயிருக்கும் என்று நம்பப்படுகிறது.

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களில் இருவரைத் தவிர ஏனையோர் விமானப்படை வீரர்கள் என்றும், காயம் அடைந்த நிலையில் 113 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 20 கட்டடங்கள் வரை முழுமையாகச் சேதம் அடைந்துள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

### விமானங்கள், ஹெலி எரிந்து நாசம்

கொழும்பு, ஜன. 23

சீனக்குடா விமானத் தளத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் முற்றாக எரிந்து சேதமடைந்த விமானங்களின் எண்ணிக்கை நான்கு என்றும் ஹெலிக்கொப்டர் ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியது என்றும் கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்ததாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது. (இ-எ)

## குண்டுவெடிப்பு சேதங்களை பிரதமர் பார்வையிட்டார்

சீனக்குடா விமானப்படைத் தளத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு அனர்த்தங்களைப் பார்வையிட அங்கு நேற்றுக் காலை பிரதமர் டி.பி. விஜயதுங்க விஜயம் செய்தார்.

குண்டுவெடிப்பினால் அழிந்து நாசமாகியுள்ள பகுதிகளைப் பார்வையிட்ட பிரதமர், அங்குள்ள விமானப்படை ஆஸ்பத்திரிக்குச் சென்று, காயமடைந்த விமானப் படையினரையும் சந்தித்து உரையாடினார்.

படுகாயமடைந்த படையினர் பலர், கொழும்புக்கு நேற்று முன்தினமே அவசர அவசரமாக எடுத்துச் செல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே. (ஒ-த)

# யாழ். மக்களின் நிலை அறிய கத்தோலிக்க குழு விஜயம்

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ். மக்களின் கஷ்ட நிலையை நேரில் கண்டறியும் நோக்கத்துடன் கத்தோலிக்க திருச்சபையின் பல்வேறு துறவற சபைகளைச் சேர்ந்த முதல்வர்கள் நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு கொழும்பில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

11 பேர் அங்கம் வகிக்கும் இந்தக் குழுவில் அருட்திரு அலெக்சாண்டர், அருட்திரு இளமன்ற், அருட்திரு நோயல் டயஸ், அருட்செல்வி சிந்தியா, அருட்செல்வி அனஸ்ரிசியா, அருட்செல்வி கனிஷ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சட்டத்தரணியான அருட்திரு நோயல் டயஸ் மனித உரிமை சம்பந்தமான குழுக்களில் முக்கியமாக இடம்பெறுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று இவர்கள் யாழ். ஆயர் இல்லத்தைச் சேர்ந்தவர்களுடனும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். வதிவிடப் பிரதிநிதி கிளாடியோவுடனும் கலந்துரையாடினார்கள்.

இன்று இவர்கள் அகதி முகாம்களுக்கு விஜயம் செய்யவும் ஏற்பாடாகி உள்ளது.

விடுதலைப்புலிகள் பிரமுகர்களையும் இவர்கள் சந்திக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [இ-3-5]

### திருமலையில் 3 தமிழர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜன. 23

திருகோணமலையில் சம்பூர் பகுதியில் நேற்று முன்தினம் மாலை படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று தமிழர்கள் உயிரிழந்தனர்.

சம்பூரைச் சேர்ந்த ராசலிங்கம் ரவிசேகன், கனகர் சிவநேசன், செல்லையா யோகேஸ்வரன் ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர். [இ-3]

## பிரதமர் - லிங்கம் குழுவினர் பெப். 5 இல் பாரிஸ் பயணம்

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் நடைபெற இருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள பிரதமமந்திரி டி. பி. விஜயதுங்க, நிதியமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் மற்றும் சிலர் அடங்கிய விசேட குழுவினர் அங்கு எதிர்வரும் 5 ஆம் திகதி செல்ல இருக்கின்றனர்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பாரிஸில் எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நடைபெற இருப்பது தெரிந்ததே.

பாரிஸ் செல்லும் விசேட குழுவில் பிரதம மந்திரியின் செயலாளர் திரு கே. எம். அபயசிங்க, சர்வதேச விவகாரம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் அடங்கியுள்ளனர். (ஒ-த)

## ஆர்வம் குன்றிய நிலையில் அனைத்து கட்சிகள் மாநாடு

### உறுப்பினர் எண்ணிக்கை குறைகிறது

கொழும்பு, ஜன. 23

அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டில் பங்கு பற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எண்ணிக்கை குறைந்து வருகின்றதாம்.

இது குறித்து அண்மையில் நடந்த அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டில் ஆராயப்பட்டது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த திரு. மோதிலால் நேரு, இம்மா

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்! அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

### புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1186)

### மாணவர் அகராதி

ஆங்கிலம் படிக்கிறீர்களா? உங்களுக்கு கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த ஆங்கில, தமிழ அகராதி 'வரதர் மாணவர் அகராதி' ரூபா 95/-. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன் துறை சாலை, யாழ்ப்பாணம். [சி-1409]

### இலவச திருமண சேவை

30 வயது சிவில் எஞ்ஜினியர், கொழும்பு சாமுவல் கொம்பனியில் கடமை ஆற்றுபவருக்கு தகுந்த மணமகள் தேவை. ஞாயிறுதோறும் காலையில் எமது சேவையை நாடுங்கள். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [5016]

### திருமண சேவை

எம்மிடம் ஆண், பெண் மணமக்கள் பலசித தொழில்களில் உண்டு. நேரில் வர முடியாதவர்கள் ஜாதகம், புகைப்படத்துடன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். சுவாமியார் இராசகுலசிங்கம், விநாயக திருமண சேவை, 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். [19436]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் வெற்றி தருமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்கள் எவையானாலும் உரிய விடை அளிக்கப்படும். ஜாதகம், குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் அனைத்துக்கும் தொடர்பு: து. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர். [19420]

### யாருடைய காசோலை

Cey-Nor நிறுவனத்தினால் A. சத்தியநாதர் என்பவருக்கு வழங்கப்பட்ட ரூபா 3,000/-க்குரிய காசோலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் வே. கனகசபாபதி ஆசிரியர், முருகமூர்த்தி கோவிலடி, நவாலி என்ற முகவரியில் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். [5015]

## இந்தியாவுக்கு அரபாத் வேண்டுகோள்

புதுடில்லி, ஜன. 23

மாஸ்கோவில் நடைபெற இருக்கும் மத்திய கிழக்கு பேச்சுவார்த்தைகளில் இந்தியாவும் கலந்து கொள்ள வேண்டும் என்று பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

மூன்றுநாள்விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா வந்துள்ள யாசீர் அரபாத் நேற்றுப் புதுடில்லியில் வைத்து இந்த வேண்டுகோளை விடுத்தார். [த]

---

புதிய பிரிவு

## கணக்கியல்

திரு. S. K. பிரபாகரன்

A/L 93: செவ்வாய் - வியாழன்; 3 — 4

A/L 92: செவ்வாய் - வியாழன்; 4 — 5

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

[சி/1349]

---

அரசாங்க

## எழுதுவினைஞர் பரீட்சை

பெப்ரவரியில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

## துரித பயிற்சி வகுப்புகள்

10 தினங்கள் மட்டும்.

- ★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
- ★ அச்சடித்த பாடக்குறிப்புகள்
- ★ நாளாந்தக் கட்டணம் ரூபா 20 மட்டுமே

**ஆரம்பம்: 25-01-1992**

முற்பகல் 10-30

பாடநெறி:- மொழித்தேர்ச்சி, உளச்சார்பு.

போட்டியில் வெற்றி பெற ஓர் அரிய சந்தர்ப்பம்!

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[சி-1413]

---

## O/L க. பொ. த. [சா. தரம்]

(ஆண்டு—11)

- ★ பகல் முழு நேர வகுப்புகள்
- ★ சனி - ஞாயிறு வகுப்புகள்
- ★ மீட்டல் வகுப்புகள்

**ஆரம்பம்: 25-01-92**

[சனி காலை 7. 45 மணி]

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

இதை விடத் தெரிவு ....... வேறேதும் இல்லை!

[C/1350]

---

## உடுகம்பொல இடத்துக்கு புதியவர் நியமனம்

கொழும்பு, ஜன. 23

சர்ச்சைக்குரிய பொலீஸ் விசேட நடவடிக்கைப் பணியகத்தின் தலைவராக பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. என். டி. ஏ. ராஜபக்ஸ நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்ததிங்கட்கிழமை அவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

இந்தப் பதவியை இதுவரை பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. உடுகம்பொல வகித்து வந்தார் என்பது தெரிந்ததே. (ஓ-த)

---

உ

சிவமயம்

## சிவாசார்யாபிஷேகம்

( குரு பட்டமளிப்பு வைபவம் )

### சிரஞ்சீவி ஸ்ரீகோபாலசர்மா

நிகழும் பிரசோற்பத்தி வருடம், தை மாதம், 10 ஆம் திகதி ( 24 - 01 - 1992 ) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-47 — 11-00 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

அராலி, வண்ணப்புரம்

**ஸ்ரீவிசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வரர்**

தேவஸ்தான பிரதமகுரு,

**கங்காதரக்குருக்கள் - சிவசுப்பிரமணியக்குருக்கள்**

அவர்களின் கனிஷ்ட புத்திரன்

**சிரஞ்சீவி ஸ்ரீ கோபாலசர்மாவுக்கு**

சிவாசார்யாபிஷேகம் நடைபெறத் தெய்வத்திருவருள் கைகூட்டியுள்ளதால், அவ்வமயம் யாவரும் வருகை தந்து சபையைச் சிறப்பித்து ஆசீர்வதிக்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்:

க. சிவசுப்பிரமணியசர்மாவும், பாரியாரும்.

[19434]

---

## நானாவித பொருள்கள் ஏல விற்பனை

பாவனைக்கு உதவாதவை எனக் கழிக்கப்பட்ட தளபாடங்கள்:

**நீரிறைக்கும் இயந்திரம், ஒலி - ஒளி அமைப்பு இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள்,**

மற்றும் பல பொருள்கள் எம்மால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். மேலதிக விவரங்களை கல்லூரி விளம்பரப் பலகையிலும், யாழ். / கல்வித்திணைக்களத்திலும் பார்வையிடலாம்.

காலம்: **05 - 02 - 1992** புதன்கிழமை காலை 9.30 மணி.

இடம்: யாழ். / முத்துத்தம்பி மகா வித்தியாலயம், திருநெல்வேலி.

பொருள்களை **04 - 02 - 1992** முற்பகல் 9.30 மணியிலிருந்து 2.00 மணிவரை பார்வையிடலாம்.

அதிபர்,
யாழ். / முத்துத்தம்பி ம. வி.,
திருநெல்வேலி.

21 - 01 - 1992 [19436]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 08 — 07 — 1929

ஆண்டவன் பிடியில்: 23 — 01 — 1991

திருமதி

### செல்வரத்தினம் மகேஸ்வரி

திதி: 11 — 02 — 1992

''ஆண்டொன் றாயிடினும் உன்னன்பு வெள்ளம்
பூண்ட விதயம் போகவில்லை - கண்டு நின்
இன்பமுக மெண்ணியெண்ணி வாழ்கின்றோம்
ஏந்திழை நின்
அன்பு மறவோ மினி''

அன்புக் கணவன், மக்கள், மருமக்கள், பேரன்.

இல. 81, மானிப்பாய் வீதி, தாவடி. [19397]

---

## நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்.

**A/L - 93**

கேள்விக் கோப்பாடு

ஆரம்பம்: **25—01—1992** (சனி) 4-00 மணி

**A/L - 93**

3ஆவது பிரிவு

ஆரம்பம்: 5-00 மணி

ஆசிரியர்: உதயன்

[சி-1417]

---

## யாழ். றோட்டரிக் கழகம்

நடத்தும்

## போலியோ (இளம்பிள்ளை வாதம்) தடுப்பு சுவரொட்டி (போஸ்டர்) / சுலோகப் போட்டிகள்

போலியோ நோயின் ஆபத்தை விளக்கவும், அது குறித்து மக்கள் விசேடமாக இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வைத் தூண்டவும்

**உதயன் வெளியீட்டகத்தின் ஆதரவுடன்**

இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன.

சுவரொட்டிகளும், சுலோகங்களும் — போலியோ தாக்குவதால் ஏற்படும் விளைவுகளை எடுத்துக் காட்டுவதுடன் — நோய் பிள்ளைகளைத் தாக்காது தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கு மக்களைத் தூண்டும் கருத்துக்களை வெளிக்கொணர வேண்டும்.

● பரிசுகள், சுவரொட்டி, சுலோகம் ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் தனித்தனியாக வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| ★ முதற் பரிசு: | ரூ. | 1000.00 |
| ★ இரண்டாவது பரிசு: | ரூ. | 750.00 |
| ★ மூன்றாவது பரிசு: | ரூ. | 500.00 |

★ பத்து ஆறுதல் பரிசுகளும் உண்டு.

★ பெரும் எண்ணிக்கையான மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க முடிவு திகதி: **31 - 01 - 1992** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

★ போட்டி விதிகளுக்கு 09 - 12 - 1991, 14 - 12 - 1991 திகதிய உதயன் இதழ்களைப் பார்க்கவும்.

போட்டிக்குக் கூடுதல் விண்ணப்பதாரிகளை அனுப்பும் பாடசாலைகளுக்கு சிறப்புப் பரிசு ஒன்று வழங்கப்படும்.

---

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

## புத்தகங்கள் அச்சிடுதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் புத்தகங்களை அச்சிட்டு வழங்குவதற்கு அனுபவமிக்க அச்சகங்களிடமிருந்து பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. Jaffna Tamil — 500 பிரதிகள் 1/8 அளவில்
2. Jaffna Kingdom — 500 பிரதிகள் 1/8 அளவில் - 500 பக்கங்களின் அளவில்

கூறுவிலைகள், பல்கலைக்கழகத்தால் காகிதாதிகள் வழங்கப்பட்டால் எவ்வளவு, காகிதாதிகள் வழங்கப்படாவிட்டால் எவ்வளவு என்பதை தனித்தனியாக கொண்டதாக இருக்க வேண்டும். அத்துடன் காகிதாதிகள் அச்சகங்களால் வழங்கப்படுவதற்கான கூறுவிலையுடன் மாதிரி காகிதாதியும் இணைக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களையும், புத்தகங்களின் உள்ளடக்கத்தையும் அலுவலக நேரங்களில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / கல்விக்கிளையில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், கூறுவிலையுடன் கட்டளை வழங்கப்பட்டு எவ்வளவு காலத்துள் அச்சடித்து வழங்க முடியும் என்பதனையும் தெரிவிக்கப்பட வேண்டும்.

கூறுவிலைகள் பொறியிடப்பட்டு கடித உறையின் இடது புறமேல் மூலையில் ''புத்தகங்கள் அச்சடித்தல்'' என குறித்து, நிதியாளர், யா / பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 31 - 01 - 1992 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கையளிக்கப்பட வேண்டும். கூறுவிலைகள் அதே தினம் காலை 10.30 மணிக்குத் திறக்கப்படும்.

\- பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி. 21 - 01 - 1992 [சி-1355]

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 01 — 02 — 1961

இறப்பு: 10 — 12 — 1991

### சுப்பையா ஆனந்தநடராசா

(ஆனந்தன்)

[உரிமையாளர்: A. K. R. மில், ஊரெழு]

மரணம் இங்கு மலிந்த வேளையிலே
மானுடம் இங்கு மரணித்த வேளையிலே
நண்பா!
நீ ஏன் எமை பிரிந்தாய்?
துயரங்களை மட்டுமே சுமக்கின்றோம் நாமிங்கே
இழப்புக்கள் எமக்கொன்றும் புதிதல்ல நண்பனே!
உன் இழப்பு மட்டும் புரியாத புதிராய்.........
நெஞ்சில் நஞ்சுடன் மனிதர் திரிகையில்
நாக நஞ்சுனக்கு யமனாய்ப் போனதுவோ?
மென்மையான இதயம் தாங்க மறுத்ததுவோ?
நீண்டகால எம் நட்பை
முறித்தெறிந்து போனாயே
எத்தனை விடயங்களை ஒன்றாக நாம் செய்தோம்
உன் பிரிவின் வெற்றிடத்தை
ஈடுசெய்ய யாருள்ளார்
உதட்டளவில் எம் நட்பு
என்பது முற்றும் பொய்
எம் மறைவு வருமட்டும்
உன் நினைவைச் சுமந்திருப்போம்.

\- நண்பர்கள்.

ஊரெழு — சுவிஸ். [19427]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### காரணமில்லாத தண்டனை

தென்பகுதிச் சிறைகளில் வாழும் கைதிகளில் நூறு பேர் ஒரு வாரத்துக்கு மேலாக தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். இவர்கள் நீண்ட காலமாக, எவ்வித விசாரணையும் இல்லாமல் கைதிகளாக வாழ்பவர்கள். இவர்களில் அனேகர் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் அல்லது அந்த இயக்கத்துக்கு உதவியவர்கள் என்ற சந்தேகத்துடன் கைது செய்யப்பட்டவர்கள். பொலிசாரும் படையினரும் தமது மேலிடங்களிடம் அதிக புள்ளிகளும் பதவி உயர்வும் பெறுவதற்காகக் கைது செய்யப்பட்ட அப்பாவிகளே இவர்களில் பலருமாவர்.

படையினர் தம் மனம் போனவாறு சந்தேகத்துக்கு உரியவர்கள் என்று முத்திரை குத்திக் கைது செய்த 4,500க்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு சிறைவாசம் அனுபவித்து வருகிறார்கள்! தம்மீது உள்ள குற்றச்சாட்டு எது என்பது தெரியாமலே சித்திரவதைகளுக்கு ஆளாகிறார்கள். அடிப்படை வசதிகள் இல்லாமல் நாளாந்தம் அவஸ்தைப் படுகிறார்கள்.

ஒருவன் குற்றவாளி என்பது நிரூபிக்கப்படுவதற்கு முன்னர், நிலைநாட்டப்படுவதற்கு முன்னர், ஊர்ஜிதப்படுத்தப்படுவதற்கு முன்னர் அவனுக்குத் தண்டனை வழங்குவது நீதிக்குப் புறம்பானதாகும். ஆனால் இப்போது நீதி விசாரணை எதுவும் நடக்காமலே மக்கள் குற்றவாளிகளைப் போல துன்புறுத்தப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும் நடைமுறையாக மாறிவிட்டது.

இலங்கையில் மட்டுமன்றி சனநாயக நாடுகள் எனத் தம் பட்டம் அடித்துக் கொள்ளும் ஏனைய பல நாடுகளிலும், விசாரணை எதுவுமின்றி சந்தேகத்துக்குரியவர்கள் என்ற நாமத்துடன் மக்கள் சிறைகளில் வைத்து இம்சிக்கப்படுவது வழக்கமாகி விட்டது. குறிப்பாக, சனநாயகத்தை மேலோங்கிய நிலையில் இராணுவ மேலாண்மை வளர்ந்து விட்ட நாடுகளில் இதுவே இயல்பாகி விட்டது.

மனித உரிமைகள் குறித்து பெரிதாகப் பேசப்படும் இக்காலகட்டத்தில், சிறைச்சாலைகளும், படைமுகாம்களுமே முதலாவது இலக்க மனித உரிமை மீறும் நிறுவனங்களாக விளங்குகின்றன. தடுப்புக் காவலில் வைக்கப்படுவதாகக் கூறி மக்களின் சகல வித சுதந்திரங்களும், உரிமைகளும் அங்கு பறிக்கப்படுகின்றன.

தமிழர்கள் இனப்போராட்டத்தைச் சாத்வீக வழியில் ஆரம்பித்ததில் இருந்து, இலங்கையில் விசாரணை இல்லாத தடுப்புக்காவல்கள், சித்திரவதைகள், மனித உரிமை மீறல்கள் மெதுவாக முளைத்தன. கால்நூற்றாண்டு காலத்தில் அவை விசுவரூபம் எடுத்து இப்போது தென்னிலங்கையர்களின் சுதந்திரங்களையும், மனித உரிமைகளையும் விழுங்கி வருகின்றன!

ஆரம்பத்தில் தமிழர்கள் சிறைச்சாலைகளில் வைத்துச் சித்திரவதை செய்யப்பட்ட போதும், மனித உரிமைகள் பறிக்கப்பட்ட போதும் சிங்களத் தலைவர்கள் அவற்றின் தாக்கங்களை உணர்ந்து கொள்ளவில்லை. இப்போது ஆயிரக்கணக்கில் தமது மக்கள் விசாரணை, காரணம் எதுவுமின்றிச் சிறைச்சாலைகளில் வாடும்போது தான் அவற்றுக்கு எதிராகக் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள். உலகத்துக்கு வெளிக்காட்டி அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க முனைகிறார்கள்.

மனிதனே மனிதனைக் காரணம் இன்றித் தண்டிப்பதையும், அவனது சுதந்திரங்களையும், உரிமைகளையும் பறித்து மிருகங்களைப் போல இம்சிப்பதையும் எந்த நாட்டிலும், எந்தப் பிரதேசத்திலும் அனுமதிப்பது அநாகரிகமானது.

அதிகாரத்தில் உள்ளவர்கள், ஏனைய சம்பந்தப்பட்டவர்கள் ஆகியோர் இதனை எப்போது உணரப்போகிறார்கள்? இவற்றைத் தடுப்பதற்கு மக்கள் போராட்டத்தைத் தவிர்ந்த வேறு வழி இல்லை!

# அகதிகளை திரும்ப அழைப்பதில் நெருங்கிச் செயற்படத் தயக்கம்!!

## சர்வதேச அமைப்புகளின் இந் நிலைக்குக் காரணம் உண்டு!

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை, விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் அதன் பின்னர் சீனக்குடா விமானத்தளத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு ஆகிய இரண்டு சம்பவங்கள் குறித்து—

அன்று மாலை கொழும்பில் உள்ள தனது கொழும்புச் செய்தியாளர் கிறிஸ் தோபர் மொறிஸை பி. பி. சி. பேட்டி கண்டது.

அந்தப் பேட்டியின் முழு விவரமும் இங்கே தரப்படுகிறது.

கேள்வி: சீனக்குடா விமானத் தளத்தில் இடம்பெற்ற வெடிகுண்டு தற்செயலாக இடம்பெற்றதா அல்லது திட்டமிட்டு நடத்தப்பட்டது என்று கருதுகிறீர்களா?

மொறிஸ்: அரசவட்டாரங்கள் இதனைத் தற்செயலாக இடம்பெற்ற விபத்து என்று கூறுகிறார்கள். ஆயுதக் குதம் இருக்குமிடத்தில் இவ்வெடி விபத்து ஏற்பட்டது.

முதலாவது குண்டு வெடித்ததும் அங்கிருந்த ஏனைய குண்டுகள் தொடர்ச்சியாக வெடித்தன.

இவ்வெடி விபத்து ஒரு சதிச்செயல் என்று கூறப்பட்டாலும் அதனை ஏற்றுக் கொள்ளக்கூடிய சாத்தியம் தென்படுகிறது.

கேள்வி: திருமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் செவ்வாயன்று மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் 20 படையினர் கொல்லப்பட்டனர் அல்லவா! அது போன்ற கரந்தடித் தாக்குதல்கள் திருமலை மாவட்டத்தில் ஒழுங்காக இடம்பெற்று வரும் ஒரு நடவடிக்கையா?

மொறிஸ்: இப்படியான தாக்குதல்கள் ஒழுங்காக இடம்பெற்று வருகின்றன என்று கூறினாலும் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் படையினர் இறக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் முக்கிய நகரங்களையும் பிரதான வீதிகளையும் பகல் நேரங்களில் மட்டுமே படையினர் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

ஆனால் முகாம்களைவிட்டு வெளியே அவர்கள் வர முயற்சிக்கையில் இப்படி விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகின்றனர்.

முகாம்களில் பெரும் எண்ணிக்கையில் படையினரை வைத்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இராணுவம் நன்கு பயிற்சி பெறாதவர்களையும் முகாம்களில் வைத்துள்ளனர்.

### அகதிகள் திரும்புவது கேள்விக்குறி

கேள்வி: இந்தியாவிலிருந்து புறப்பட்ட முதல் தொகுதி ஈழத் தமிழ் அகதிகள் புதன் கிழமை காலை திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைய உள்ளனர். இத்தருணத்தில் இந்த இரண்டு சம்பவங்களும் திருமலை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன. இக்கட்டத்தில் தமிழ் அகதிகள் திரும்புவதற்கான ஸ்திரமான சூழ்நிலை இருக்கிறது என்று கருதுகிறீர்களா?

மொறிஸ்: இலங்கைப் பிரசை எவரும் தாயகம் வர விரும்பினால் அவர்கள் திரும்பி வருவதற்கு உரிமை உண்டு என்று இலங்கை அரசு வாதாடுகின்றது.

இந்தக் கட்டத்தில் அகதிகளை தாயகம் திரும்பும்படி ஆலோசனை கூறுவது குறித்து பெரிய கேள்விக்குறி எழுந்துள்ளது.

ஈழத் தமிழ் அகதிகளை இந்தியாவிலிருந்து திரும்ப அழைத்துவரும் விஷயத்தில் அகதிகளுக்கான ஐ. நா. தூதராலயம் போன்ற சர்வதேச அமைப்புகள் நெருங்கிச் செயற்படுவதற்குத் தயக்கம் காட்டுகின்றன.

தென் இந்தியாவில் உள்ள அகதி முகாம்களுக்குச் சென்று அங்கு தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளைச் சந்தித்து அவர்கள் விருப்பத்தை அறிந்து கொள்ள இந்த சர்வதேச அமைப்புகளுக்கு வாய்ப்பு வழங்கப்படாததே இதற்குக் காரணமாகும்.

இதனால் தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகள் உண்மையாகத் தமது தாயகம் திரும்பிவர விரும்புகிறார்களா என்பது கேள்விக் குறியாக உள்ளது.

### பாதுகாப்பு குறித்துக் கவலை

இலங்கையில் உள்ள பாதுகாப்பு நிலைவரம் குறித்தும் இந்த அமைப்புகள் கவலை கொண்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை திருமலையில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் கரந்தடித் தாக்குதல் வடக்கு-கிழக்கில் நிலைமை சகஜ நிலைக்கு வரவில்லை என்பதையே காட்டுகிறது. பொது மக்கள் இல்லாத இடத்தில் தான் இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்று அரசு கூறுகிறது.

கேள்வி: இந்தியாவிலிருந்து ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பி வருவதைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்த இரண்டு சம்பவங்களையும் விடுதலைப் புலிகள் திட்டமிட்டு நடத்தினர் என்றும் கூறலாமா?

மொறிஸ்: சீனன்வாடி வெடிகுண்டு வெடித்த சம்பவத்தை விடுதலைப்புலிகள் நடத்தினர் என்று சொல்வது பிழையாக இருக்கக் கூடும்.

ஆனால் திருமலைக் காட்டில் நடத்தப்பட்ட கரந்தடித் தாக்குதல் விடுதலைப் புலிகள் நடத்தினர் என்பதை மறுக்க முடியாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதற்கு முன்னர் தமிழ் அகதிகள் இலங்கை திரும்பக்கூடாது என்றும் — அகதிகளின் பாதுகாப்புக்கு விடுதலைப் புலிகள் பொறுப்பாக இருக்கமாட்டார்கள் என்றும் விடுதலைப் புலிகள் தலைவர் ஒருவர் எச்சரித்து இருந்தார்.

(அ-எ)

### நவசமசமாஜ கட்சியின் 14ஆவது மாநாடு

நவசமசமாஜக் கட்சியின் 14ஆவது ஆண்டு நாளை மறுதினம் 25 ஆம் திகதி கொழும்பு கம்பல் பூங்காவில் நடைபெறும்.

அன்று மாலை நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் விக்ரமபாகு கருணாரத்ன, பத்தேகம சமித்த தேரோ, இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் உட்பட பலர் உரையாற்றுவர்.

[த-10]

### விவேகானந்தர் பிறந்தநாள் திதி பூஜை

சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் திதி பூஜை எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறும்.

எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணிவரை பாடசாலையில் பயிலும், உயர்தர வகுப்பில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான ஆத்மீக கருத்தரங்கும் இடம் பெறும். [த]

### விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 23

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் அங்கத்தவர்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

### டி. ஐ. ஜி. மூவருக்கு சேவை நீடிப்பு

கொழும்பு, ஜன. 23

ஓய்வு பெறும் 60 வயதை அடைந்துள்ள மூன்று பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுக்கு (டி. ஐ. ஜி.) சேவை நீடிப்பு வழங்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது குறித்து சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சேவை நீடிப்பு முடிவு அமைச்சரவையின் அங்கீகாரமில்லாமல் எடுக்கப்பட்டிருப்பதாகவும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் குறை கூறியுள்ளனர். [ஒ-எ]

## சிங்கள மக்களுக்கு ஆபத்தான எதிர்காலமாம்!

### ஜெயசூரியா சொல்கிறார்

கொழும்பு, ஜன. 23

சிங்கள மக்களிடையே பிளவுகள் உள்ளன. இது பேராபத்தை தோற்றுவிக்கும். ஆகவே, சிங்கள மக்களே சிங்கள நாட்டைப் பாதுகாக்க- காப்பாற்ற- அனைவரும் அணிதிரண்டு வாருங்கள்!

சிங்கள தேச பாதுகாவலர் அமைப்பின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான திரு. காமினி ஜெயசூரியா இவ்வாறு சிங்கள மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

பன்னிப்பிட்டியாவில்கடந்த சனியன்று பௌத்த மாணவர்களுக்கு பரிசளிக்கும் வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

திரு. தொண்டமானுக்கு இப்போதுள்ள சக்தி அளப்பரியது; மகத்தானது. எமது ஜனாதிபதிக்கு உள்ள சக்தியை — அதிகாரத்தை விட தொண்டமானுக்கு உள்ள பலம் மேலானதாகக் கூட சில சமயங்களில் தோன்றுகிறது.

அதே சமயம், சிங்கள மக்கள் சரித்திரத்தில் என்றும் இல்லாதவாறு ஒரு பயங்கரமான பாதாளத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் மிக மோசமான, ஆபத்தான வருங்காலத்தை எதிர்நோக்கியுள்ளனர். இதனை எவரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இதற்கு ஆவன செய்யாவிடில், சிங்கள மக்களும், நாடும், புத்தசாசனமும் அழிந்தொழிந்து, இல்லவே இல்லாது போய்விடும் — என்றார். [ஒ-10]

### கலை நிகழ்ச்சி

தென்மராட்சி, ஜன. 23

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம், இடம் பெயர்ந்த மக்களின் நிவாரணப் பணிக்காக தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகத்தின் ஆதரவுடன் நடத்தும் மாபெரும் கலை நிகழ்ச்சி எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6-00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெறும்,

[த]

## சிங்களவரைக் காப்பாற்ற 'வயதானோர்' போர்க்கொடி!

### ஆளும்கட்சி எம். பி. கிண்டல்

கொழும்பு, ஜன. 23

சிங்கள மக்களைக் காப்பாற்ற தங்களால் முடிந்ததைச் செய்யப்போவதாக இன்று வழுக்கை விழுந்த 'கிழவர்களே' போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

பல் விழுந்த, நிமிர்ந்து நிற்க சக்தி இல்லாத இந்த அறுபது, எழுபது வயதுக் கிழவர்களால் இதனைச் செய்ய முடியுமா?

இவ்வாறு ஆளும்கட்சியின் மாத்தறை மாவட்ட எம்.பியான திரு. எச். ஆர். பியசிறி, களுத்துறை— நாகொடவில் நடந்த கூட்டம் ஒன்றில் கேள்வி எழுப்பினார்.

கடந்த 18 ஆம் திகதி நடந்த இந்தக் கூட்டத்துக்கு ஜனாதிபதி பிரேமதாசா [illegible]

சிங்கள தேச பாதுகாவலர் அமைப்பின் தலைவரான திரு. காமினி ஜெயசூரியா போன்றவர்களைக் 'கிண்டல்' செய்யும் வகையிலேயே திரு. பியசிறி இவ்வாறு குறிப்பிட்டிருப்பார் என்று அவதானிகள் திரு. பியசிறியின் பேச்சுக்கு வியாக்கியானம் செய்தனர். [ஒ-10]

## இனப்பிரச்சினை நீண்ட புவிசார் வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது

### நூல்வெளியீட்டு வைபவத்தில் உரை

இலங்கை இனப்பிரச்சினை நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. இப்பிரச்சினை இந்திய உபகண்டத்துக்குரிய புவிசார் வரலாற்று பின்னணியில் உருப்பெற்று காலகதியில் பல்வேறு பரிணாமங்களைப் பெற்று வளர்ந்த ஒன்றாகும்.

திரு. மு. திருநாவுக்கரசு எழுதிய ''இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்'' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து [illegible] தாய்ப் [illegible] சார்பில் உரை நிகழ்த்திய இரு[illegible] மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த சனிக்கிழமை இந்த வைபவம் இடம்பெற்றது.

ஆசிரியர் திரு. இராசநாயகம் தலைமையில் இடம் பெற்ற அந்த வைபவத்தில் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன், விரிவுரையாளர் அ. குமாரவேல், திரு. சிவா சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

[illegible] திரு நாவுக்கரசுவும் அந்த உரை [illegible] [இ-5]

### இந்து சமயப் பேரவை ஆரம்பக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்து சமயப் பேரவையின் ஆரம்பக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்

ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை வழங்குவர். [த-10]

### கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு மின்சாரம்

கொழும்பு, ஜன. 23

கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரிக்கு இரண்டு ஜெனரேட்டர்கள் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது.

அப்பகுதி வர்த்தகர்கள் சங்கம் இந்த ஜெனரேட்டர்களை வழங்கியிருக்கிறது.

[த எ]

### 408 தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜன. 23

எதிர்வரும் 24 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரவிருக்கும் 'குமாரி' கப்பலில் 408 தபால் பொதிகள் எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கப்பலில் இரண்டாயிரத்து 650 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களும் எடுத்து வரப்படுகின்றன. [இ-3]

### குமணவில் 41 நோயாளிகள்

யாழ்ப்பாணம், ஜன. 23

பருத்தித்துறையில் இருந்து எதிர்வரும் சனிக்கிழமை புறப்படும் 'குமண' கப்பலில் கடும் சுகயீனமுற்ற 41 நோயாளர்கள் செல்லவிருக்கின்றனர்.

தற்சமயம் இந்தக் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் பருத்தித்துறையில் நடைபெற்று வருகின்றன. [இ-3]

### அமைச்சரவையின் புதிய செயலாளர் அபயரத்தினா

கொழும்பு, ஜன. 23

அமைச்சரவையின் புதிய செயலாளராக திரு. ஆர். அபயரத்தினாவை ஜனாதிபதி பிரேமதாஸா நியமித்திருக்கிறார்.

நிர்வாக சேவையைச் சேர்ந்த ஜனாப். எம். எம். ஜுனைத் பொதுநிர்வாக மாகாண சபை மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

[இ-எ]

### சீனா வெளியேற்றிய சிலரும் கனேடிய மனித உரிமைக் குழுவில்

கொழும்பு, ஜன. 23

இலங்கை வரும் கனேடிய மனித உரிமை விசாரணைக்குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களில் சிலர் அண்மையில் பீகிங்கிலிருந்து சீன அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் இடம்பெறுவதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரணை நடத்த அண்மையில் பீகிங் சென்ற கனேடிய மனித உரிமைக் குழுவில் இவர்களும் இடம் பெற்றிருந்தனர்.

நேற்று கொழும்பு வரவிருந்த இந்த மனித உரிமை விசாரணைக் குழுவில் மூன்று எம்பிக்கள் உட்பட ஒன்பது பேர் இடம்பெறுகின்றனர்.

இக்குழு சமர்ப்பிக்கவிருக்கும் அறிக்கையைப் பொறுத்தே இலங்கை தொடர்பான தனது கொள்கையை கனேடிய அரசு நிர்ணயிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ-எ]

### சகஜ நிலைக்குப் பின்பே யாழ். வர அனுமதி

கொழும்பு, ஜன. 23

யாழ்ப்பாணத்தில் சகஜ நிலை திரும்பிய பின்னரே, அங்கு விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிங்களப் பொலீஸாரையும் ஆயுதப்படையினரையும் சந்திக்க அவர்களது உறவினர்கள் அனுமதிக்கப்படுவர்.

தம்மைச் சந்தித்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிங்களப் பொலீஸாரினதும் ஆயுதப்படையினரினதும் உறவினர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி அளித்ததும் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் கடைசி நேரத்தில் இவர்கள் யாழ். விஜயத்தை நிறுத்தி வைத்ததும் தெரிந்தவையே. [இ-எ]

### இமெல்டாவுக்கு எதிராக மேலும் நான்கு வழக்குகள்

மணிலா, ஜன. 23

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ள திருமதி இமெல்டா மார்கோஸ் மீது மேலும் நான்கு ஊழல் வழக்குகளை மணிலா அரசு நேற்று தாக்கல் செய்தது.

இதனை அடுத்து திருமதி மார்கோஸ் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஊழல் வழக்குகளின் எண்ணிக்கை 58 ஆக அதிகரித்துள்ளது. [இ-எ]

### நெடுந்தீவுக்கு கப்பல் மூலம் அத்தியாவசியப் பொருட்கள்

யாழ்ப்பாணம், ஜன. 23

நெடுந்தீவுப் பகுதியில் நிலவும் உணவு மற்றும் மருந்து தட்டுப்பாட்டை நீக்குவதற்காக அங்கு கப்பல் மூலம் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது

அண்மையில் நெடுந்தீவுக்குச் சென்றிருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள், அங்கு ப. நோ. கூ. சங்க தலைவர் மற்றும் ஆஸ்பத்திரி அதிகாரிகள் உட்பட பொது மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்கள்.

அனுப்பப்படவேண்டிய பொருள்களை யாழ். செயலகம் ஒழுங்கு செய்தால் அவற்றை கப்பல் மூலம் அங்கு எடுத்துச் சென்று அங்குள்ள மக்களுக்கு வழங்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தயாராகவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

### ஆசிரிய இடமாற்ற சபை

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ். மாவட்டத்தில் ஆசிரிய இடமாற்றங்களை இடமாற்ற சபைமூலம் மேற்கொள்வது பற்றி ஆராய யாழ். கல்வி அலுவலக இடமாற்ற சபை நாளை வெள்ளி காலை 9 மணிக்கு கூடுகிறது.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் உட்பட சகல கோட்ட கல்விப் பணிப்பாளர்களும் ஆசிரிய தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் அதில் பங்கு கொள்கின்றனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லலித் கட்சிக்கு அங்கீகாரம்; தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது

## "ஐக்கியம்—தேசியம்" குறித்துச் சூடான வாதம்

கொழும்பு, ஜன 23

முன்னாள் அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலி, காமினி திசநாயக்கா ஆகியோர் ஆரம்பித்துள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரிலான புதிய அரசியல் கட்சியை அங்கீகரிப்பது பற்றி தீர்ப்பு வழங்குவதைத் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா ஒத்தி வைத்திருக்கிறார்.

புதிய கட்சியை அங்கீகரிப்பது பற்றிய இறுதிக்கட்ட விசாரணை கடந்த 14ஆம் திகதி தேர்தல் ஆணையாளரால் நடத்தப்பட்டது.

புதிய கட்சிக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆணையாளருக்கு முறையிட்டிருந்தது. அந்த முறைப்பாட்டின் மீதே தேர்தல் ஆணையாளர் விசாரணை நடத்தினார்.

புதிய கட்சிக்கு ஆங்கிலத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெயரில் உள்ள ஐக்கியம் மற்றும் தேசியம் என்ற வார்த்தைகள் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் பெயரை பிரதிபலிப்பதாக உள்ளன என்றும் —

இது வாக்காளர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் என்றும் ஆளும் கட்சியின் சார்பான சட்டத்தரணி கே. என். சொக்ஸி விசாரணையின் போது வாதாடினார்.

புதிய கட்சியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி லக்ஷ்மன் கதிர்காமர் வாதாடுகையில் —

குழப்ப முடியாத அளவுக்கு வாக்காளர்கள் முதிர்ச்சி பெற்றுள்ளார்கள் என்று சொன்னார்.

ஐக்கியம் மற்றும் தேசியம் ஆகிய வார்த்தைகள் ஒரு கட்சியின் ஏகபோக சொத்தல்ல என்றும் —

மக்கள் தேசியப் பற்றுடன் ஐக்கியமாக வாழ வேண்டும் என்று அரசமைப்புச் சட்டம் கூட வலியுறுத்துவதாகவும் — சட்டத்தரணி கதிர்காமர் மேலும் சுட்டிக்காட்டினார்.

நான்கரை மணித்தியாலங்கள் நடந்த விசாரணையின் போது அத்துலத் முதலி, காமினி திசநாயக்கா ஆகியோருக்கும் திரு. சொக்ஸிக்கும் இடையே சூடான வாக்குவாதம் இடம்பெற்றது.

இருதரப்பினரிடமும் தேர்தல் ஆணையாளர் எதுவித கேள்வியையும் கேட்கவில்லை. தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

(அ-எ)

## பயிர்களைக் காக்கவும் புதிய பாதுகாப்புப்படை!

விவசாயிகளின் நெற்பயிர் மற்றும் பயிர் வகைகளைப் பாதுகாக்க புதிய பாதுகாப்புப் படை ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்திருக்கிறது.

இப்புதிய படையில் ஊர்காவல் படையினரும் பொலிஸாரும் இடம் பெறுகின்றனர்.

விவசாயிகளின் பயிர்களை காட்டு யானைகள், பன்றிகள் மற்றும் மிருகங்களிடமிருந்து பாதுகாக்கும் யுத்தத்தை புதியபடை நடத்தும் என்று பொலிஸார் கூறினார்கள்.

ஒப்படைத்த தமது துப்பாக்கிகளை திருப்பித்தரும் படி விவசாயிகள் விடுத்த வேண்டுகோளை அரசு ஏற்றுக்கொள்ள மறுத்ததைத் தொடர்ந்து இப்புதிய மாற்று நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது.

(அ-எ)

# இரண்டாவது சபை குறித்து தீர்மானம் எதுவும் இல்லை

கொழும்பு, ஜன. 23

நாடாளுமன்றத்திற்கு இரண்டாவது சபை ஒன்றை அமைப்பது பற்றி அரசு தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை.

கடைசியாக நடந்த அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டில் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் சாகுல் ஹமீத், நாடாளுமன்றத்திற்கு இரண்டாவது சபை ஒன்றை அமைக்கும் யோசனையை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிப்பதாகக் கூறினார்.

அதனைக் கேட்டு மாநாட்டில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் ஆச்சரியப்பட்டனர்.

அப்போது, மாநாட்டுக்கு தலைமை வகித்த ஜனாதிபதி பிரேமதாசா எழுந்து, இரண்டாவது சபை ஒன்றை அமைப்பது சம்பந்தமாக அரசு தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை என்று கூறினாராம்.

[இ-எ]

## கல்வி அபிவிருத்திக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 23

தென்மராட்சிக் கல்விக் கோட்ட கொத்தணிப் பாடசாலை ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக அங்கத்தவர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்,

[இ]

## வடக்கு - கிழக்குப் பிரச்சினை:

# 3 மாதத்தில் தீர்வு வரும் தொண்டாவின் நம்பிக்கை!

கொழும்பு, ஜன. 23

வடக்கு - கிழக்கு தமிழரின் பிரச்சினைக்கு சுமுகமான ஒரு தீர்வு விரைவில் கிடைக்கும் என்பதில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இன்னும் நம்பிக்கை இழக்கவில்லை.

கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் நேற்றைய தினம் வெளியான ஒரு செய்தியில் இருந்து இது தெரியவருகிறது.

இன்னும் 3 மாத காலத்துக்குள் தீர்வு காணப்படக்கூடிய சூழ்நிலை ஒன்று உருவாகி வருகிறது என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்ததாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

[ஒ-த]

# வெருகல் சின்னக் கதிர்காமம் பலத்த சேதமுற்றது

கொழும்பு, ஜன. 23

மூதூர்த் தொகுதியில் வெருகல் ஆற்றின் அருகில் உள்ள சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் சேதமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மகாவலி கங்கையின் ஒரு கிளை தான் வெருகல் ஆறு என்றழைக்கப்படுகின்றது.

சின்னக் கதிர்காமம் என்று அழைக்கப்படும் இந்த ஆலயத்தின் தற்போதைய அவல நிலை குறித்து இந்துசமய விவகார துணை அமைச்சருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

[அ-எ]

# நாட்டில் அராஜக சக்திகள் மீண்டும் தலை தூக்குகின்றன

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

கொழும்பு, ஜன. 23

நாட்டில் இனவெறி மற்றும் அராஜக சக்திகள் மீண்டும் தலையெடுக்கின்றன என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூறியுள்ளது.

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தை அன்று எதிர்த்த அதே இனவாத அராஜக சக்திகளே இன்று மீண்டும் தலையெடுத்து இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளைக் குழப்புகின்றன என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உயர் வட்டாரங்கள் தெரிவித்தன என்று அரச சார்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தத் திரு. தொண்டமான் எடுத்த முயற்சிகள் பற்றி பல்வேறு தரப்பினர் தெரிவிக்கும் விமர்சனங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இ. தொ. க. வட்டாரங்கள் இக்கருத்தை வெளியிட்டன என்றும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

[த-எ]

## அரசாங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் நிர்வாகத்திற்குட்பட்ட பிராந்தியத்தில் ஆண், பெண் பரிசாரகர் பதவிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய தகுதியுடைய திணைக்கள ஊழியர்களுக்கு 02-02-1992 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பின்வரும் பாடங்களில் பரீட்சை நடைபெறும்.

| | | |
|---|---|---|
| தமிழ்மொழி | — | 1½ மணித்தியாலம் |
| பொதுச்சுகாதாரம் | — | 1 மணித்தியாலம் |

சம்பந்தப்பட்டோர் பரீட்சைக்குத் தோற்றுமாறும், அவர்களின் நிறுவனத் தலைவர்கள் அவர்களை பரீட்சைக்குத் தோற்ற விடுவிக்குமாறும் வேண்டப்படுகிறார்கள்.

**டாக்டர் ந. கனகசபை,**
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

[செ 1419]

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

லண்டன், ஜன. 23

தென்பகுதிச் சிறைகளில் கடந்த வாரம் உண்ணாவிரதம் ஆரம்பித்த சுமார் 100 கைதிகள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை தற்காலிகமாகக் கைவிட்டுள்ளனர்

இலங்கை அரசின் மனித உரிமைகள் பாதுகாப்புக் குழுத் தலைவர் திரு. சொய்சா மேற்கண்டவாறு பி. பி. சிக்கு தெரிவித்துள்ளார்.

கைதிகளின் உறவினர்கள் கைதிகளைப் பார்வையிடவும்—

கைதிகள் தாமே சமைத்து உண்ணவும் வசதி செய்யப்பட்டுள்ளதாகவும்— அவர் தெரிவித்துள்ளார்.

[இ-3]

## கைப்பற்றப்பட்ட..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள் — 01

★ ஜி 3 ரவைக் கூடு — 01

★ ரி 81 ரகத் துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள் — 05

ரி 56 ரகத் துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள் — 03

★ 7. 62 நடுத்தர ரவைகள் — 607

★ கேட்டோ ரவைகள் — 20

★ ஜே. ஆர். கைக்குண்டுகள் — 05

[இ-3]

## வவுனியாவில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்தச் சம்பவத்திற்கு முன்னர், காலை ஏழு மணியளவில், வீதித்தடைகளை அகற்றும் நோக்குடன் மாமடு எல்லைக் காவல் அரணிலிருந்து முன்னேறி வந்த இராணுவ அணி ஒன்றின் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். காவல் அரணிலிருந்து சுமார் 100 யார் தூரத்தில் வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

முதலில் வந்த அணியினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதும் மற்றொரு அணியினர் அவர்களுக்கு உதவியாக வந்தனர். இரண்டாவது அணியினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் நான்கு படையினர் உயிரிழந்தனர்.

விடுதலைப் புலிகள் இங்கும் பல ஆயுதங்களைக் கைப்பற்றினர்.

[அ-3-15]

## அகதிகளுடன்,.

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இமானுவல் டி சில்வா ஆகியோர் வரவேற்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்னும் நான்கு தினங்களில் மேலும் 750 பேர் திருகோணமலை வந்தடைவார்கள் என்றும் இவர்கள் அனைவரும் உப்பு வெளி விசேட முகாமில் தங்க வைக்கப்பட்டு கூடிய விரைவில் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

[இ-த]

## நெடுந்தீவிலிருந்து..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்தார்.

மூன்று மாதங்களாக துணி துவைப்பதற்கு சவர்க்காரம் கூடக் கிடைக்கவில்லை என்றும்—

ஆசிரியர்கள், அரச ஊழியர்களுக்கு இன்னமும் சம்பளம் வழங்கப்படவில்லை என்றும் மற்றொருவர் கூறினார்.

(இ-111-3-5)

## கல்வித் திணைக்கள

# கடன் வழங்கும் சங்கத்தில் ரூ. 18 லட்சம் மோசடி

கொழும்பு, ஜன. 23

கல்வித்திணைக்கள ஊழியர்களின் கடன் வழங்கும் சங்கத்தில் 18 லட்சம் ரூபா மோசடி இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக சங்க செயலாளர் விக்ரம ஹென்னாயக்காவும் மற்றும் 12 பெண்களும் இரகசியப் பொலீஸாரினால் விசாரிக்கப்படுகிறார்கள்.

செயலாளர் விக்கிரம ஹென்னாயக்கா சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கடந்த 14 ஆம் திகதி கோட்டை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பெண்களில் நால்வர் செயலாளரின் அலுவலக ஊழியர்களாவர். இம் மோசடி தொடர்பாக சங்கத்தின் தலைவர் பீ. வாசலதிலக, பிரதிப் பொது முகாமையாளர் என். கே. சிரிசேன ஆகியோரும் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்காக இரகசியப் பொலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

# திருமலை கடற்றொழில் அபிவிருத்திக்கு ரூ. 13 கோடி

## ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியது

கொழும்பு, ஜன. 23

திருகோணமலை மாவட்டத்தில் கடற்றொழில் அபிவிருத்தி வேலைகளுக்காக 12 கோடியே 80 லட்சம் ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி கடனாக வழங்கியுள்ளது.

திருமலையில் உள்ள கடற்றொழில் அமைச்சில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் கடற்றொழில், நீரியல் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா இத்தகவலை வெளியிட்டார்.

இப்பணத்தை மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும் விநியோகிக்கும்.

தீவிரவாத வன்செயல்களில் சேதமடைந்த 247 மீன் பிடி வள்ளங்கள் மற்றும் சாதனங்களைப் புதுப்பிப்பதற்காகவும் - புதியவற்றைக் கொள்வனவு செய்வதற்காகவும் இப்பணம் பயன்படுத்தப்படும். இதற்காக பத்துக்கோடி 80 லட்சம் ரூபாவை அரசாங்கமும் வழங்கியிருக்கிறது.

# புலிகளைத் தாக்கி அழிக்க படையினர் தயார் நிலையில்!

## இராணுவ உயர் அதிகாரி தகவல்

கொழும்பு, ஜன.23

விடுதலைப் புலிகளின் கழுத்தை நாம் இறுக்கிப் பிடித்து வைத்திருக்கிறோம். எந்த நேரமும் அவர்களைத் தாக்கி அழிக்கக்கூடிய நிலையில் ஆயுதப்படையினர் உள்ளனர்.

இவ்வாறு இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் ஆகக் குறைந்த நிலைக்கு வந்து விட்டது. விடுதலைப் புலிகள் கயிறுகளுக்குள் சிக்கி நசிந்துள்ளனர் என்று இன்னொரு இராணுவ அதிகாரி கூறினார்.

"சமாதானப் பேச்சுவார்த்தைக்கு பின்னர் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டபோது யாழ்ப்பாணத்தில் 12 ஆயிரம் புலிகள் இருந்தனர். ஆனால் இன்று அவர்களின் எண்ணிக்கை 6 ஆயிரமாகக் குறைந்துள்ளது. இவர்களில் 800 பேர் மட்டுமே அனுபவமுள்ளவர்கள் ஆவர் என்றும் அந்தப் பேச்சாளர் சொன்னார்.

[ஒ-எ]

## லக்னோவில் 4 மாணவர் சூட்டுக்கு பலி!

லக்னோ ஜன. 23

உத்தரபிரதேசத்தில் பொலீஸ் நிலையம் ஒன்றைத் தாக்க மாணவர் கும்பல் ஒன்று முயற்சித்த போது பொலீஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு மாணவர்கள் உயிரிழந்தனர்.

ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்தே மாணவர்கள் வன்முறையில் இறங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## ஆர்வம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டில் கருத்துத் தெரிவிக்கையில் மாநாட்டு நிகழ்ச்சிகளை படம் பிடித்து டெலிவிஷனில் காட்ட வேண்டும் என்று கூறினார்.

லிபரல் கட்சித் தலைவரான டாக்டர் சாணிக அமரதுங்கா, பேசுகையில் மாநாட்டில் கலந்து கொள்ள பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்றார்.

வேறு சிலர் கருத்துத் தெரிவிக்கையில் மாநாட்டில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களுக்கு நல்ல உணவு வழங்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள்.

இறுதியில் ஒவ்வொரு கட்சியும் இரண்டு பிரதிநிதிகளையும் மூன்று பார்வையாளர்களையும் அழைத்து வரவேண்டும் என்று கோரப்பட்டது.

மாநாட்டில் ஜனாதிபதி கலந்துகொள்ளும் போது மட்டும் தான் உறுப்பினர்கள் சரியான நேரத்துக்கு மாநாட்டுக்கு வந்து விவாதங்களில் கலந்து கொள்கின்றனர் ... [illegible]

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 23

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு அச்சுவேலியிலுள்ள நிலையக் கட்டடத்தில் நடைபெறும்.

(த)

## நாகராஜனை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பிணை வழங்கப்பட்டுள்ளது.

திரு. நாகராஜன் கடந்த வருடம் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டார் என்பதும் - உடல் நலம் இல்லாததால் அவர் திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்பதும் தெரிந்ததையே.

(த)

# மரண அறிவித்தல்கள்

## நாகரத்தினக்குருக்கள் ஸ்ரீநிவாசகுருக்கள்

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரம் பெரியபுலம் வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நா. ஸ்ரீநிவாசக் குருக்கள் 21 1-1992 அன்று காலை 8-00 மணிக்கு கொழும்பில் காலமானார்.

அன்னார் சாரதாம்பாளின் அன்பு கணவரும், புங்குடுதீவு சிவன் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ மா. மீனாக்ஷிசுந்தரக் குருக்களின் மைத்துனரும், பரமேஸ்வரி, இரகுநாதக்குருக்கள் [பிரதமகுரு, வீரகத்தி விநாயகர் ஆலயம், அரியநாயகன் புலம்], நாகேந்திரக்குருக்கள் [பிரதமகுரு, சிவன் கோவில், புங்குடுதீவு], ஷண்முகநாதக்குருக்கள் [பிரதமகுரு, வில்லையடி விநாயகர் ஆலயம், நெடுங்கேணி], திருஞானசம்பந்த சர்மா, சர்வானந்த சர்மா [கனடா], கிருஷ்ண லீலா, மீனலோசனி, குகனேஸ்வர சர்மா [கனடா], ஆனந்த சர்மா [கனடா] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவஸ்ரீ நிர்த்தனராஜக் குருக்கள் [நாவற்குழி], நாகரூபியம்மா, லோகேஸ்வரியம்மா, இராஜலக்ஷ்மியம்மா, மங்கையற்கரசி [கனடா], வேங்கடரமண சர்மா [கொழும்பு], குக சர்மா [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பு, தெகிவளை விகாரை லேன், போதிக்கிராம றோட், இல. 3/8 இல்லத்தில் 26-1-1992 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
**ஸ்ரீ நாகேந்திரக்குருக்கள்**
[சின்னமணி]

இல. 138, கி. வி. திட்டம்,
திருநெல்வேலி,
கோப்பாய்.

(19440)

## மூத்ததம்பி சதாசிவம் (அப்பா)

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் 39, கனகபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்ததம்பி சதாசிவம் (அப்பா) காலமானார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் புவனேஸ்வரன், சுமந்திரன், கிருத்திகா (மகாஜனாக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-01-92 (இன்று) அளவெட்டியில் ப. நோ. கூ. சங்கத்திற்கு அருகில் 12 மணிக்கு நடைபெறும்.

தகவல்
**ம. பத்மநாதன்**
''கடற்கிரி''
அளவெட்டி கிழக்கு.

[19439]

## செல்லையா நடராஜா

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அன்டர்சன் தொடர் மாடி, கொழும்பு 5 இல் [E-3/1 - 215, Anderson Flats, Colombo-5] வசித்தவருமான செல்லையா நடராஜா [இளைப்பாறிய சுங்கப் பகுதி உத்தியோகத்தர்] 18-1-1992 இல் கனடாவில் காலமானார். அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா [ஆசிரியர்] தம்பதிகளின் புதல்வனும், சண்முகராஜா [தபால் அதிபர்], காலஞ்சென்ற திருமதி பண்டிதர் வைத்திலிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
**கு. அருளம்பலம்.**
ஆனைக்கோட்டை.

[19435]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org